## மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019
# வணிகக்கல்வியும் கணக்கீடும்

**தரம் 11** **பகுதி 1** 60- T- I. II

**மூன்று மணித்தியாலயம்** **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்குக**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **இலக்கம் 01 தொடக்கம் 40 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

கீழே தரப்படும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக

➢ சாந்தி “சக்தி உணவகம்” என்னும் பெயரில் சிறிய உணவகமொன்றை பிரதான நகரமொன்றில் நடாத்திவருகின்றார். இவர் நகரில் அமைந்துள்ள அரச, தனியார் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேவையான மதிய உணவுகளை, ஒவ்வொரு நாளும் தனது சகோதரனின் உதவியோடு நேரடியாகச் சென்று அவற்றிற்கான கட்டளைகளைப் பெற்று உணவு தயாரித்து உரிய வேளையில் விநியோகித்து வந்தார். ஒவ்வொரு நாளும் வேறுபட்ட உணவுகளை தயாரிப்பதன் காரணமாக சாந்தியின் மதிய உணவுப் பொதிகளுக்கு அலுவலர்கள் மத்தியில் நல்ல மதிப்பு காணப்பட்டது.

Education கல்வி අධ්‍යාපන

01. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் “சக்தி உணவகம்” என்னும் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படுகின்ற மனித விருப்பம் யாது?
(1) சோறு (2) உணவு
(3) இருப்பிடம் (4) கல்வி

02. இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் “சக்தி உணவகம்” எதிர்காலத்தில் எத்தகைய வணிகமாக மாற்றப்பட முடியும்?
(1) கூட்டுறவுச்சங்கம் (2) தனியுடைமை வணிகம்
(3) பங்குடமை வணிகம் (4) கூட்டுத்தாபனம்

03. மேற்குறிப்பிட்ட வணிகத்தில் அரச, தனியார் அலுவலக ஊழியர்கள் எத்தகைய அக்கறை காட்டும் தரப்பினராகக் கருதப்படுவார்.
(1) உரிமையாளர்கள் (2) வழங்குநர்கள்
(3) போட்டியாளர்கள் (4) வாடிக்கையாளர்

04. சக்தி உணவகமானது பிரதான நகரில் அலுவலகங்களுக்கு அண்மையில் அமைந்திருப்பது சாந்தியின் வணிகத்திற்கு ஒரு,
(1) பலமாகும் (2) வாய்ப்பாகும்
(3) பலவீனமாகும் (4) அச்சுறுத்தலாகும்

05. சாந்தி தனது சகோதரனின் உதவியுடன் நேரடியாக உணவுப் பொதிகளை விநியோகம் செய்கின்றார் என்பதன் மூலம் நிறைவேற்றப்படும் சந்தைப்படுத்தல் கருமம்,
(1) பொருள் (2) இடம்
(3) மேம்படுத்தல் (4) விலை



kalvi.lk

06. பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் வளங்களைக் குறிப்பது,

(1) நிதிவளம் (2) பௌதீக வளம்

(3) மனித வளம் (4) உற்பத்திக்காரணிகள்

07. வணிகமொன்றின் அகச்சூழல் காரணியாகக் கருதப்பட முடியாதது

(1) வழங்குநர்கள் (2) முகாமையாளர்கள்

(3) உரிமையாளர்கள் (4) ஊழியர்கள்

08. பின்வரும் வணிக அமைப்புகளுள் பொதுத்துறை வணிகமாக கருதப்படக்கூடிய வணிக அமைப்புச் சோடியினைத் தெரிவு செய்க.

(1) அரசகூட்டுத்தாபனம், அங்கீகார வணிகம்

(2) பங்குடமைவணிகம், தனியுடைமை வணிகம்

(3) அரச திணைக்களங்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் வணிகம்

(4) சங்க வகை வணிகம், அரச கம்பனிகள்

09. கீழே வியாபார நடவடிக்கை தொடர்பாக சில கூற்றுக்கள் தரப்படுகின்றன.

- மீனாட்சி பிரபல பாடசாலையொன்றின் சிற்றூண்டிச்சாலை ஒன்றை பொறுப்பேற்று பல்வேறு சிற்றூண்டிகளை மாணவா்களுக்கு விற்பனை செய்கின்றாா்.
- கமலி தனது பிரதேசத்தில் வசிக்கும் அலுவலக பணியாளா்களின் விருப்பத்திற்கேற்ப காலை உணவுகளை தயாரித்து வியாபாரம் செய்கின்றாா்.
- ரதன் பிரபல உணவகமொன்றிற்கு தேவையான சிற்றூண்டிகள் சிலவற்றை தயாரித்து வழங்குகின்றாா்.
- விமலன் தனது கிராமத்தில் உற்பத்தியாகும் பாலினை சேகரித்து நகரப்பகுதியில் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்கின்றாா்.

மேலே உள்ள கூற்றுக்கமைய மொத்த வியாபாரியாகக் கருதப்படக் கூடியவா்

(1) மீனாட்சி (2) கமலி

(3) ரதன் (4) விமலன்

10. இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கண்ணன் என்பவர் தனது வாடிக்கையாளரான ராகுலனுக்கு ரூ.50,000 இற்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தார். காசோலை தொடர்பில் காசோலை வரைபவரையும் பணம் வழங்குவோரையும் முறையே எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,

(1) இலங்கைவங்கி, கண்ணன் (2) கண்ணன், ராகுலன்

(3) இலங்கைவங்கி, ராகுலன் (4) கண்ணன், இலங்கைவங்கி

11. வாகீசன் என்பவர் தனது வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்தும் மோட்டார் வாகனமொன்றை காப்புறுதி செய்வதற்காக காப்புறுதிக் கம்பனி ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தார். எனினும் குறிப்பிட்ட மோட்டார் வாகனம் அவரது தந்தைக்கு சொந்தமானதாக இருந்தது. இவ் விண்ணப்பத்தை காப்புறுதிக் கம்பனி நிராகரித்தது இதற்கு காரணமாக அமைந்த காப்புறுதித் தத்துவம்,

(1) இழப்பீட்டுத் தத்துவம் (2) காப்புறுதி செய்யத்தகு நலன்

(3) பதிலாள் வைப்புத் தத்துவம் (4) உச்ச நம்பிக்கை

12. இலங்கையில் போக்குவரத்துத்துறையில் நிகழ்ந்த சில சம்பவங்கள் X நிரலிலும் போக்குவரத்து மூலகங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. போக்குவரத்திற்காக இ.போ.ச இனால் 100 ஆடம்பர பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை. | A. பாதை |
| 2. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தமை | B. ஊடகம் |
| 3. கட்டுநாயக்கா விமான நிலையம் நவீன மயமாக்கப்பட்டுள்ளமை | C. வலு(சக்தி) |
| 4. கொழும்பு – காலி அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டமை | D. தரிப்பிடம் |

மேலே X நிரலில் உள்ள சம்பவங்களுக்குப் பொருந்ததக்க Y நிரலில் உள்ள போக்குவரத்து மூலகங்களை சரியான ஒழுங்கில் எடுத்துக் காட்டும் விடையாக அமைவது,

(1) A,B,C,D (2) B,C,A,D

(3) B,C,D,A (4) C,B,D,A



kalvi.lk

13. சுரேகா தனது நண்பியான ஹரிணிக்கு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியினை தொலைபேசியில் தெரிவித்த போது அதனை ஹரிணி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதுடன், நன்றியும் தெரிவித்தார். மேற்கூறிய கூற்றுக்கமைய தொடர்பாடல் செயன்முறையை சரியாகக் காட்டுவது,
(1) சுரேகா ⟶ பிறந்தநாள் வாழ்த்து ⟶ தொலைபேசி ⟶ ஹரிணி ⟶ மகிழ்ச்சி ⟶ நன்றி தெரிவித்தல்
(2) ஹரிணி ⟶ பிறந்தநாள் வாழ்த்து ⟶ தொலைபேசி ⟶ சுரேகா ⟶ மகிழ்ச்சி ⟶ நன்றி தெரிவித்தல்
(3) பிறந்தநாள் வாழ்த்து ⟶ ஹரிணி ⟶ தொலைபேசி ⟶ சுரேகா ⟶ மகிழ்ச்சி ⟶ நன்றி தெரிவித்தல்
(4) தொலைபேசி ⟶ ஹரிணி ⟶ பிறந்தநாள் வாழ்த்து ⟶ சுரேகா ⟶ மகிழ்ச்சி ⟶ நன்றி தெரிவித்தல்

14. பிரபல புடைவை வியாபாரியான கார்த்திக் தனது வியாபாரத்தை விரிவுபடுத்த இணைய வழிமூலம் வணிகம் செய்யத் தீர்மானித்ததுடன் அதற்கு பொருத்தமான தகவல் தொழிநுட்ப அறிவுள்ள ஊழியர் ஒருவரை ஆட்சேர்த்தார். இச்சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள முகாமைக் கருமங்களைக் குறிப்பிடுக.
(1) நெறிப்படுத்தல், திட்டமிடல்
(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல்,
(3) கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல்
(4) கட்டுப்படுத்தல், திட்டமிடல்

15. சந்தைப்படுத்தல் கலவை மாறியில் உள்ளடங்கும் தரம், கூறுகள், வடிவம், பொதியிடல், சுற்றுறை, வியாபாரப் பெயர் ஆகிய உருப்படிகளைக் குறிப்பது
(1) உற்பத்திப் பொருள்
(2) இடம்
(3) விலை
(4) மேம்படுத்தல்

16. கணக்கீட்டின் பிரதான நோக்கம்
(1) வணிகத்தின் நிதி நிலைமையை அறிதல்
(2) நிதிசார் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்
(3) வணிகத்தின் அக்கறை செலுத்தும் தரப்பினர்களுக்கு பல்வேறுபட்ட தகவல்களை வழங்குதல்.
(4) சட்டத்தேவைப்பாடுகளை நிறைவேற்றல்

17. நடைமுறைப் பொறுப்புக்களை கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க
(1) காணி கட்டிடம், இயந்திரம், தளபாடம்
(2) கடன் கொடுத்தோர், அட்டுறுச்செலவு, வங்கி மேலதிகப்பற்று
(3) சரக்கிருப்பு, கடன்பட்டோர், வங்கி மீதி
(4) கடன்பட்டோர், அட்டுறுச்செலவு, சரக்கிருப்பு

18. கீழ்வரும் நடவடிக்கைகளிலிருந்து சொத்தினையும், உரிமையையும் அதிகரிக்கும் விடை எது?
(1) காசுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் ரூ.10,000
(2) உரிமையாளர் ரூ.100,000 பெறுமதியான தனது மோட்டார் வாகனத்தினை நிறுவனத்தில் முதலீடு செய்தல்
(3) வங்கிக்கடன் தவணைக் கட்டணமாக ரூ.20,000 செலுத்தப்பட்டது.
(4) மின்சாரக் கட்டணம் ரூ.5000 செலுத்தப்பட்டது.

19. நடவடிக்கை ஒன்றிற்கான கணக்கியல் சமன்பாடு கீழ்வருமாறு

| சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| -6000 | | -600 | | -5400 |

கீழ்வரும் நடவடிக்கைளில் எது மேற்படி கணக்கியல் சமன்பாட்டிற்கு பொருத்தமானது.
(1) கடன் கொடுத்தோனாகிய நரேஷிற்கு ரூ.5400 செலுத்தப்பட்டது.
(2) ரூ 6000 கிரயமான பொருட்கள் ரூ 5400 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
(3) வங்கிக்கடன் தவணைக் கட்டணமாக ரூ 6000 செலுத்தப்பட்டது. அத் தொகையில் ரூ 600 வங்கிக்கடன் வட்டி உள்ளடங்கியுள்ளது.
(4) கடன் கொடுத்தோருக்கு ரூ 5400 செலுத்தியதன் மூலம் பெற்ற கழிவு ரூ 600

20. உரிமைக் கணக்குகளை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க
(1) கட்டிடக் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு
(2) விற்பனைக் கணக்கு, தரகு வருமானக் கணக்கு
(3) சம்பளக் கணக்கு, காப்புறுதிக் கட்டணக் கணக்கு
(4) மூலதன கணக்கு, பற்றுக் கணக்கு

21. பின்வருவனவற்றுள் முதன்மை ஏடுகள் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்க
(1) வணிகமொன்றின் சகல கடன் விற்பனைகளும் விற்பனை நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்
(2) நிறுவனப் பயன்பாட்டிற்காக கடனுக்கு மேற்கொள்ளப்பட்ட இயந்திரக் கொள்வனவானது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்
(3) வணிகமொன்றின் சகல கொள்வனவுகளும் கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்
(4) கொடுக்கல் வாங்கல் ஒன்றைப் பதிவு செய்வதற்கு விசேட முதன்மை ஏடு ஒன்று இல்லாதவிடத்து அது காசேட்டில் பதிவு செய்யப்படும்

22. காசுப் பெறுவனவிற்கான மூல ஆவணம்
(1) பற்றுச்சீட்டு (2) வைப்புச்சீட்டு
(3) வரவுக்குறிப்பு (4) கைச்சாத்து

23. காசுக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காணப்படும் கழிவு?
(1) காசுக்கழிவு (2) கொடுத்த கழிவு
(3) பெற்ற கழிவு (4) வியாபாரக் கழிவு

24. வியாபார நிறுவனமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல், வாங்கல் ஒன்று கீழே தரப்படுகின்றது.
குமரன் என்பவரிடமிருந்து ரூ 20,000 பெறுமதியான மீள்விற்பனைக்கான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப்பதிவாக அமைவது,
(1) காசுக் கணக்கு வரவு ரூ 20,000
குமரன் கணக்கு செலவு ரூ 20,000
(2) கொள்வனவுக் கணக்கு வரவு ரூ 20,000
குமரன் கணக்கு செலவு ரூ 20,000
(3) குமரன் கணக்கு வரவு ரூ 20,000
கொள்வனவுக் கணக்கு செலவு ரூ 20,000
(4) காசுக் கணக்கு வரவு ரூ 20,000
கொள்வனவுக் கணக்கு செலவு ரூ 20,000

25. விற்பனை மூலம் பெற்ற ரூ 20,000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்படுவதற்கான இரட்டைப் பதிவாக அமைவது,
(1) வங்கிக் கணக்கு வரவு ரூ 20,000
விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
(2) காசுக் கணக்கு வரவு ரூ 20,000
விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
(3) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
வங்கிக் கணக்கு செலவு ரூ 20,000
(4) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
காசுக் கணக்கு செலவு ரூ 20,000

26. காசேட்டினைப் போன்று இரட்டைத் தொழிற்பாட்டினை நிறைவேற்றும் முதன்மையேடாகக் கருதப்படுவது,
(1) விற்பனை நாட்குறிப்பு (2) கொள்வனவு நாட்குறிப்பு
(3) பொது நாட்குறிப்பு (4) சில்லறைக் காசேடு

27. வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விடக் குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பமாக அமைவது,
(1) கைதேறாத காசோலைகள் (2) மாற்றப்படாத காசோலைகள்
(3) நேரடி வைப்புக்கள் (4) வங்கிக்கட்டணம் செலுத்தப்படும் போது

28. விற்பனை நாட்குறிப்பேடு ஒரு,
(1) பேரேட்டுக்கணக்காகும் (2) மூல ஆவணமாகும்
(3) முதன்மைப் பதிவேடாகும் (4) நிதிக் கூற்றாகும்



kalvi.lk

29. ஆதி என்பவர் தனது வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பூந்தி லட்டுக்களை தனது குடும்ப நிகழ்வொன்றுக்கு எடுத்துக் கொண்டார். இது

(1) கொள்வனவு நாளேட்டில் பதியப்படும்
(2) விற்பனை நாளேட்டில் பதியப்படும்
(3) பொது நாட்குறிப்பில் பதியப்படும்
(4) கொள்வனவுக் கணக்கில் பதியப்படும்

30. தொலைபேசிக் கட்டணம் ரூ.10,000 இற்கான கொடுப்பனவு காசேட்டில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருத்தலுக்கான இரட்டைப் பதிவாக அமைவது,

(1) தொலைபேசிக் கட்டணக் கணக்கு வரவு ரூ 10,000
தொங்கல் கணக்கு செலவு ரூ 10,000
(2) தொலைபேசிக் கட்டணக் கணக்கு வரவு ரூ 10,000
காசுக் கணக்கு செலவு ரூ 10,000
(3) தொங்கல் கணக்கு வரவு ரூ 10,000
தொலைபேசிக் கட்டணக் கணக்கு செலவு ரூ 10,000
(4) காசுக் கணக்கு வரவு ரூ 10,000
தொலைபேசிக் கட்டணக் கணக்கு செலவு ரூ 10,000

**31.** கணக்கீட்டுச் செயன்முறையாக **அமையாதது,**

(1) மூல ஏடுகளில் பதிவு செய்தல்
(2) பரீட்சை மீதி தயாரித்தல்
(3) செம்மையாக்கல்கள்
(4) நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

32. நிதி நிலைமைக் கூற்றொன்றின் அடிப்படைக் கூறுகளை உள்ளடங்கிய விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க

(1) வருமானங்கள், செலவினங்கள், உரிமை
(2) சொத்துக்கள், உரிமை, பொறுப்புக்கள்
(3) சொத்துக்கள், உரிமை, வருமானங்கள்
(4) வருமானங்கள்,செலவினங்கள்,பொறுப்புக்கள்

❖ 33, 34 ஆம் வினாக்களுக்கு பின்வரும் கூற்றுக்கமைய விடையளிக்குக.

2018.01.01 இல் 12% வட்டியில் ரூ 50 000 வங்கிக்கடன் பெறப்பட்டது. குறித்த நிதியாண்டில் இரண்டு மாதத்திற்குரிய (01.01.2018- 31.12.2018) கடன்வட்டி செலுத்தப்படவில்லை.

33. செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டியின் பெறுமதி

(1) ரூ 1000 (2) ரூ 6000 (3) ரூ 5000 (4) ரூ 500

34. செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டிக்கான இரட்டைப் பதிவாக அமைவது,

(1) வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(2) அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(3) வங்கிக் கடன் கணக்கு வரவு
அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு
(4) அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு
வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு

❖ பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன அகமட் வணிகத்திலிருந்து 31.12.2018 இல் இருந்தவாறு பிரித்தெடுக்கப்பட்ட சில மீதிகள் ஆகும்.

| | |
|---|---|
| சரக்கிருப்பு (01.01.2018 இல் இருந்தவாறு) | ரூ 60000 |
| விற்பனைகள் | ரூ 200000 |
| கொள்வனவுகள் | ரூ 110000 |
| உள்வந்த வண்டிக் கூலிகள் | ரூ 10000 |
| கட்டிடம் (கிரயத்தில்) | ரூ 200000 |
| 01.01.2018 இல் கட்டிட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | ரூ 100000 |
| கடன்பட்டோர் | ரூ 30000 |
| வங்கி மேலதிகப்பற்று | ரூ 20000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 25000 |
| காப்புறுதிக்கட்டணங்கள் | ரூ 10000 |



kalvi.lk

| | |
|---|---|
| விநியோகச் செலவுகள் | ரூ 5000 |
| காசுமீதி | ரூ 25500 |
| கொடுத்த கழிவு | ரூ 2500 |
| மூலதனம் | ரூ 108000 |

❖ மேலதிக தகவல்கள்

➢ கட்டிடங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.

➢ 31.12.2018 இல் உள்ளபடியான சரக்கிருப்பு ரூ 30000 ஆகும்.

35. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விற்ற சரக்கின் கொள்விலையின் பெறுமதி?
    (1) ரூ 180000 (2) ரூ 120000 (3) ரூ 200000 (4) ரூ 150000

36. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
    (1) ரூ 180000 (2) ரூ 150000 (3) ரூ 120000 (4) ரூ 50000

37. இவ்வணிகத்தின் நடைமுறை சொத்து ஒன்றினையும், நடைமுறைப் பொறுப்பு ஒன்றினையும் ஒழுங்குமுறையில் எடுத்துக் காட்டும் விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
    (1) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர்
    (2) சரக்கிருப்பு, கடன்பட்டோர்
    (3) கடன்கொடுத்தோர், கடன்பட்டோர்
    (4) வங்கி மேலதிகப்பற்று, கடன்கொடுத்தோர்

38. இவ்வணிகத்தின் 31.12.2018 இல் இருந்தவாறு கட்டிடத்தின் தேறிய பெறுமதி யாது?
    (1) ரூ 100000 (2) ரூ 120000 (3) ரூ 80000 (4) ரூ 20000

39. 31.12.2018 இல் இருந்தவாறு நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி யாது?
    (1) ரூ 85500 (2) ரூ 55500 (3) ரூ 60000 (4) ரூ 30000

40. 31.12.2018 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் மொத்தச்சொத்துக்களின் பெறுமதி
    (1) ரூ 85500 (2) ரூ 80000 (3) ரூ 165500 (4) ரூ 25500



kalvi.lk

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019
வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 11 பகுதி 11

❖ முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
❖ விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**(01) கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு 1 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய அமைதியற்ற சூழல், சுனாமி அனர்த்தம் காரணமாக நாட்டின் அபிவிருத்திக்கு பாதிப்பு ஏற்பட்ட போதிலும் அனுகூலமான பொருளாதாரக் கொள்கையும், வணிகங்களுக்கு சாதகமான சட்டதிட்டங்களும் இருந்த காரணத்தினால் இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை குறிப்பிட்ட அளவிற்கு வளர்த்துக் கொள்ள முடிந்துள்ளது. நாட்டில் சமாதான நிலைமை காணப்படல், வேலைக்குச் செல்லும் பெண்கள் தொகை அதிகரிப்பு, முதியோர் சனத்தொகை அதிகரிப்பு இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளுக்கான விலை அதிகரிப்பு காரணமாக உள்நாட்டு வணிகர்களுக்கு வணிகங்களை ஆரம்பிப்பதற்கு பல்வேறு வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

முன்னைய நாட்டு நிலைமை காரணமாக முல்லைத்தீவிலிருந்து வெளிநாடு சென்றிருந்த வித்தியன் அங்கு கற்றிருந்த பண்ணைவளர்ப்பு மற்றும் பால் பதனிடல் தொடர்பான அறிவையும், அங்கு சேமித்த பணத்தையும் கொண்டு தனது சொந்த கிராமத்தில் நடமாடும் பால் சேகரிக்கும் வணிகமொன்றை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார். இவர் பால் பண்ணை உற்பத்தியாளர்களிடமிருந்து பாலினை சேகரித்து, அவற்றை முறையாக பதப்படுத்தி இதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தில் ஊழியர் ஒருவரை நியமித்து தனது பிரதேச மக்களுக்கு காலை, மாலை வேளைகளில் பாலினை விநியோகித்து வருகின்றார்.

பின்வருவன 01.06.2018 இல் இருந்தவாறு வித்தியன் வணிகத்தின் கணக்கு மீதிகள் ஆகும்.

- காசுமீதி — ரூ 155 000
- கடன்பட்டோர் (உணவகங்கள்) — ரூ 35 000
- கடன்கொடுத்தோர் — ரூ 20 000
- காணியும், கட்டிடமும் — ரூ 300 000
- விநியோக வாகனங்கள் — ரூ 500 000
- பால் பதனிடல் உபகரணங்கள் — ரூ 100 000

பின்வருவன 30 யூன் 2018 இல் முடிவடைந்த மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களாகும்.

- பால் கொள்வனவு -காசு (பண்ணை உற்பத்தியாளர்களிடமிருந்து) — ரூ 300 000
- பால் கொள்வனவு –கடன் — ரூ 50 000
- பால் விற்பனை – காசு — ரூ 400 000
- பால் விற்பனை – கடன் — ரூ 150 000
- ஊழியர் சம்பளம் — ரூ 18 000
- செலுத்திய காப்புறுதிக் கட்டணம் — ரூ 10 000
- பாலினை சேகரிப்பதற்கான செலவு — ரூ 5 000
- செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் — ரூ 2 000
- நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு வருடாந்தம் கிரயத்தில் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படவேண்டியதுடன் 30.06.2018 இல் எதுவித சரக்கிருப்பும் காணப்படவில்லை.

வித்தியன் எதிர்காலத்தில் தானே சுயமாக பண்ணை வளர்ப்பினை மேற்கொள்ள எண்ணியிருந்ததுடன், தனது வணிகத்தை ஒரு சட்ட ஆளுமையுள்ள வணிகமாக மாற்ற எண்ணினார். தற்போதைய பால் மா விலை அதிகரிப்பினால் உள்நாட்டு பால் மா உற்பத்தியார்களை அரசு ஊக்குவித்ததன் காரணமாக பாலிற்கான கேள்வி அதிகரித்தது. இதனால் உள்நாட்டு பால்மா உற்பத்தி நிறுவனம் ஒன்றிலிருந்து பால் கொள்வனவிற்கான கட்டளை கிடைக்கப்பெற்றமையால் வித்தியன் நிதிப்பற்றாக்குறையினை ஈடுசெய்ய வருகின்ற மாதத்தில் மேலதிக மூலதனமாக ரூ 100 000 இனை இடத் தீர்மானித்திருந்தார்.

1) (அ) வித்தியனின் தற்போதைய வணிகம் உரிமை அடிப்படையில் எவ்வகையைச் சார்ந்தது?
(ஆ) வித்தியன் பாலினை விநியோகிக்கப் பயன்படுத்தும் விநியோக வாகனம் மற்றும் பால் பதனிடல் உபகரணம் என்பன எந்த உற்பத்திக்காரணிக்குரியது?


kalvi.lk

2) மேற்படி வணிகத்தில் இனங்காணக்கூடிய
   (அ) வணிக வாய்ப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
   (ஆ) வணிகத்திற்கு பலமாக காணப்பட்ட இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.
3) (அ) வித்தியன் குறிப்பிட்ட வணிகத்தை ஆரம்பிக்கத் தூண்டிய வணிக வாய்ப்பு எது?
   (ஆ) வித்தியனால் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவக் கருமம் இரண்டினை உதாரணத்துடன் குறிப்பிடுக.
4) (அ) வித்தியன் எதிர்காலத்தில் எவ்வகையான வணிக அமைப்பினை ஆரம்பிக்க முடியும்?
   (ஆ) மேற்கூறிய சம்பவத்தில் இனங்காணக்கூடிய அரசியல் சட்டச் சூழலுக்கு உதாரணம் ஒன்று தருக.
5) 01.06.2018 இல் நடமாடும் பால் விற்பனை நிலையத்தின் உரிமையாண்மை எவ்வளவு?
6) மேற்படி வணிகத்தில் 30.06.2018 இல் காசு மீதி எவ்வளவு?
7) (அ) வித்தியன் வணிகத்தில் ஏற்பட்ட நிர்வாகச் செலவிற்கு இரண்டு உதாரணம் தருக.
   (ஆ) மேற்படி வணிகத்தில் உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் ஒன்று தருக.
8) (அ) செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத்திற்கான இரட்டைப்பதிவினைத் தருக.
   (ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
9) மேலதிக மூலதனமிட்டால் பேரேட்டுக் கணக்குகள் எவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுக.
10) தேறிய இலாபத்தினைக் கணிப்பிடுக.

(2×10= 20 புள்ளிகள்)

## பகுதி II
## (அ)
## வணிகக்கல்வி
## (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 02**

1. (அ) பொதுவாகக் காணப்படும் வணிக நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக
   (ஆ) வணிகமொன்றில் உள்ளக ரீதியாக அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக
   i. மனித தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்கின்ற தொட்டுணரக் கூடியவையும், பௌதிகத் தன்மை கொண்டவையும் சேவைகள் எனப்படும்.
   ii. அரசு குறைவான வட்டி வீதத்தில் கடன்முறைகளை அறிமுகப்படுத்துவதானது ஒரு வணிகத்திற்கு வாய்ப்பாகும்.
   iii. பங்குடமை ஒன்றின் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் குறிப்பிடுகின்றது.
   iv. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டத்தின் கீழ் அல்லது பொதுவான சட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கள் உருவாக்கப்படுகின்றன.

(02 புள்ளிகள்)

3. பாலன் என்பவர் பிரம்பிலான கதிரை மேசைகளை அவரின் ஆக்கத்திறனால் வெவ்வேறு வடிவங்களில் அவரின் உதவியாளர் ஒருவரின் உதவியுடன் அழகிய வர்ணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து வருகின்றார்.
   (அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் இரண்டு உற்பத்திக் காரணிகளை எழுதுக
   (ஆ) நீர் மேலே 3 (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.

(02 புள்ளிகள்)

4. ரதன் தன்னிடம் உள்ள சிறிய தொகையைப் பயன்படுத்தி "ரதி புடைவை வணிகம்" என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார்.
   (அ) ரதனின் வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான உமது கருத்தினைக் குறிப்பிடுக.
   (ஆ) ரதனின் வணிகத்தில் விஷேடமாக காணப்படும் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(02 புள்ளகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

**வினா இல 03**

1. (அ) வியாபாரம் என்றால் என்ன?
   (ஆ) சில்லறை வியாபாரத்தின் முக்கியத்துவம் இரண்டு தருக?

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக
   i. சில்லறை வியாபாரத்திற்கும், மொத்த வியாபாரத்திற்குமான வேறுபாடு கொள்வனவு செய்தலின் நோக்க அடிப்படையிலேயே தங்கியுள்ளது.
   ii. காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு ஆரம்பிக்கப்படும் கணக்கு நடைமுறைக் கணக்காகும்.
   iii. இழப்பீட்டுத் தத்துவம் ஆயுட் காப்பறுதிக்குப் பொருத்தமற்றது.
   iv. தொடர்பாடல் செயன்முறை பூர்த்தியடைவதற்கு பின்னூட்டல் தேவையானதல்ல.

(02 புள்ளிகள்)

3. அகிலா என்னும் நடைமுறைக் கணக்குரிமையாளர் ராமன் என்பவரிடம் கடன் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவாக ரூ 50,000 பெறுமதியான காசோலை ஒன்றினை வழங்கியிருந்தார்.
   (அ) மேற்படி சம்பவத்தின்படி காசோலையினை புறக்குறிப்பிடும் போது காசோலையின் பின்புறத்தில் கையொப்பம் இடவேண்டிய அல்லது பெயரைக் குறிப்பிட வேண்டிய நபர் யார்?
   (ஆ) மேற்படி காசோலையினை பாதுகாப்பான காசோலையாக மாற்ற வேண்டுமெனின் யாது செய்ய வேண்டும்? (02 புள்ளிகள்)

4. கண்ணன் என்பவர் தனது வணிகத்திற்காக கொள்வனவு செய்த மோட்டார் வாகனத்தை வரையறுத்த செலிங்கோ காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்தார்.
   (அ) இங்கு முறையே காப்புறுதி அளிப்பவர், காப்புறுதி செய்பவர் ஆகியோரைக் குறிப்பிடுக.
   (ஆ) காப்புறுதி தத்துவங்கள் இரண்டின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

1. (அ) இலக்கு சந்தை என்றால் என்ன?
   (ஆ) வணிகம் ஒன்றின் செயற்பாடுகளுக்கு உதவும் துணைச்சேவைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.
   i. குறைந்த பட்சம் மூன்றாம் நபர் காப்புறுதியை பெற்ற மோட்டார் வாகனங்கள் மட்டுமே பாதையில் பிரயாணம் செய்ய முடியும்.
   ii. விமான நிலையம், புகையிரத நிலையம், துறைமுகம் என்பன போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களில் ஊடகத்தை குறித்து நிற்கின்றது.
   iii. வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே மேலதிகப்பற்று கடன்வசதி வழங்கப்படும்.
   iv. வரையறுக்கப்படாத பொறுப்பினையும், சட்ட ஆளுமையும் அற்ற தனியார்துறை அமைப்பாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் காணப்படுகின்றது.

(02 புள்ளிகள்)

3. கலைமகள் வித்தியாலயத்தில் ஒரு நாள் சுற்றுலா ஒன்றினை தரம் 11 மாணவர்கள் செல்வதற்கு விரும்பியிருந்தனர். அந்த வகையில் தரம் 11 வகுப்பாசிரியரினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
   i. சுற்றுலா செல்வதற்கு பொருத்தமான இடம், காலம், புறப்படும் நேரம், தேவையான பணம் போன்றவற்றை தீர்மானித்தல்.
   ii. தரம் 11 மாணவர்களை குழுக்களாக்கி, சுற்றுலாவின் போது செயற்படும் விதம் பற்றிய தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல்.



kalvi.lk

iii. சுற்றுலாவின் போதும் பின்னரும் திட்டமிட்டபடி கருமங்கள் நடைபெறுகின்றதா என தேடியறிதலும் அவ்வாறில்லாவிடில் அதற்கான தீர்வுகளை கண்டறிதல்.

iv. சுற்றுலாவினை வெற்றிகரமாக மேற்கொள்ள மாணவர் குழுக்களுக்கு தலைவர்களை நியமித்தல்.

மேலே கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு பொருத்தமான முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

4. பல்வேறுபட்ட கேக் வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று உயர்வான தரமுடைய, புதிய சுவையுள்ள கேக் வகைகளை உற்பத்தி செய்து, பல்வேறுபட்ட வடிவமைப்புகளுடன் ரூ 280, ரூ 450 விலைகளில் நகரத்திலுள்ள உணவங்கள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்வதற்கு தீர்மானித்தனர். அத்துடன் உற்பத்தி தொடர்பாக வாடிக்கையாளர் அறிந்து கொள்வதற்காக உள்ளூர் பத்திரிகையொன்றில் விளம்பரம் செய்திருந்ததுடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டிருந்தனர்.

மேலே உள்ள சம்பவத்தின் மூலம் இனங் காணப்படும் சந்தைப்படுத்தல் கலவை நான்கினையும் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்களை மேற்படி சம்பவத்திலிருந்து தருக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி II
### கணக்கீடு
### (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

**வினா இல 05**

1. (அ) பொறுப்புக்கள் என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) சாகித்யா நிறுவனத்தின் பின்வரும் நடவடிக்கைகளை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எனும் அடிப்படையில் வகைப்படுத்துக

1. வங்கிக்கடன்
2. மோட்டார் வாகனம்
3. கடன் கொடுத்தோர்
4. கடன்பட்டோர்
5. வங்கி மேலதிகப்பற்று
6. அட்டுறு செலவுகள்
7. நிலையான வைப்பு
8. கட்டிடம்

.

(02 புள்ளிகள்)

2. பின்வரும் விடயங்களுக்கு இரட்டைப்பதிவுத் தத்துவத்தைக் குறிப்பிடுக

i. சொத்து
ii. பொறுப்பு
iii. வருமானம்
iv. செலவு

(02 புள்ளிகள்)

3. (அ) பின்வருவன மூல ஏடுகள், மூல ஆவணங்கள் தொடர்பான கூற்றுக்களாகும். இவற்றில் சரியான கூற்றுக்களை சரி எனவும் பிழையான கூற்றுக்களை பிழை எனவும் குறிப்பிடுக.

i. நிறுவனம் ஒன்றின் தேவைக்காக கணினி இயந்திரமொன்று அல்பா கம்பனியிடம் கொள்வனவு செய்யும் போது அதற்கான மூல ஏடாக கொள்வனவு நாட்குறிப்பு காணப்படுகின்றது.

ii. வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதற்கான மூல ஆவணமாக காசோலை அடியிதழ் காணப்படுகின்றது.

iii. உலோக, தாள் நாணயங்கள் பெறுவனவு கொடுப்பனவு தொடர்பான பதிவுகள் காசேட்டில் இடம்பெறும்.

iv. கடனுக்கு கொள்வனவு செய்யப்படுகின்ற மீள் விற்பனைக்கான பொருள்கள் விற்பனை நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும்.

(02 புள்ளிகள்)

(ஆ) பின்வருவன வியாபார நிறுவனமொன்றில் நிகழ்ந்த சில கொடுக்கல் வாங்கல்கள் ஆகும்.

a) உடைமையாளரால் ரூ 50,000 மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.

b) பெற்றுக் கொண்ட வங்கிக்கடன் ரூ 30,000 ஆகும்.

c) கடனுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் ரூ 15,000 ஆகும்.

d) மாதாந்த மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டது ரூ 2000 ஆகும்

e) தம்ரோ தளபாட விற்பனை நிலையத்திடமிருந்து கடனுக்கு ரூ 100,000 தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.



kalvi.lk

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குமாக வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கு , செலவு வைக்கப்பட வேண்டிய கணக்கு ஆகியவற்றைக் குறிப்பிடுக. விடையளிப்பதற்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்துக. முதலாவது கொடுக்கல், வாங்கல் உமக்காக செய்து காட்டப்பட்டுள்ளது.

(02 புள்ளிகள்)

| கொடுக்கல் வாங்கல் | வரவு வைக்க வேண்டிய கணக்கு | செலவு வைக்கப்பட வேண்டிய கணக்கு |
|---|---|---|
| i. | காசுக்கணக்கு | மூலதனக் கணக்கு |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |
| v. | | |

4. (அ) சந்திரன் நிறுவனத்தில் 28.02.2019 இல் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் மீதிகள் சில வருமாறு.

| | |
|---|---|
| கடன்பட்டோர் | ரூ 30,000 |
| காணி கட்டிடம் | ரூ 120,000 |
| வங்கிக்கடன் | ரூ 60,000 |
| தளபாடம் | ரூ 70,000 |
| கடன் கொடுத்தோர் | ரூ 40,000 |
| காசுமீதி | ரூ 35,000 |
| வங்கி மேலதிகப்பற்று | ரூ 10,000 |

மேலே தரப்பட்ட தகவலின்படி கீழ்வருவனவற்றைக் கணிப்பிடுக.

a) நடைமுறைச் சொத்து

b) நடைமுறையல்லாத சொத்து

c) நடைமுறைப் பொறுப்பு

d) நடைமுறையல்லாப் பொறுப்பு

(02 புள்ளிகள்)

(ஆ) 2019 யூன் மாதத்திற்காக வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட கொள்வனவு நாளேடு கீழே தரப்படுகின்றது.

| திகதி | பட்டியல் இல | வழங்குநர் | மொத்த தொகை | பே.ப |
|---|---|---|---|---|
| 6/15/2019 | 110 | ஆதவன் | 5500 | |
| 6/23/2019 | 125 | கதிரவன் | 11300 | |

**வேண்டப்படுவது:-**

(அ) 30 யூன் 2019 மாதத்தில் உள்ளவாறு மேலேயுள்ள கொள்வனவு நாளேட்டைப் பூர்த்தி செய்க

(ஆ) மேலேயுள்ள கொள்வனவு நாளேட்டில் காணப்படும் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

1. (அ) வங்கி மேலதிகப்பற்று என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) கணக்கீட்டில் வெளிக் காட்டாத தவறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

2. பின்வருவன நகுலன் என்பவரால் 01.01.2018 இல் ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிறுவனமொன்றில் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் நிகழ்ந்த கொடுக்கல், வாங்கல்கள் ஆகும்.

ஜனவரி 01 ரூ 100000 முதலிடுவதன் மூலம் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனவரி 03 காசு மூலமான விற்பனைகள் ரூ 40 000 ஆகும்.



kalvi.lk

ஜனவரி 04 கணேஷ் என்வரிடமிருந்து கடனுக்கு ரூ 25000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜனவரி 05 காசாக செலுத்திய வாடகை ரூ 5000

ஜனவரி 06 வீமன் என்பருக்கு செய்த கடன் விற்பனைகள் ரூ 15000 ஆகும்

ஜனவரி 07 காசாக செலுத்திய மின்சாரக் கட்டணம் ரூ 3000 ஆகும்

**வேண்டப்படுவது**

❖ மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களை வியாபார நிறுவனத்தின் காசேட்டில் பதிவதுடன் 07.01.2018 இல் காசு மீதியைக் காட்டுக. (02 புள்ளிகள்)

3. (அ) 31-03-2018 இல் கந்தன் வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது சமப்படவில்லை. சமப்படாததற்கான காரணங்களை இனங்காணும்போது பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

I. தளபாடத்திருத்தம் ரூ 6000 தளபாடக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தது.

II. மின்சாரக்கட்டணம் ரூ 1200 காசுக் கணக்கில் மட்டுமே பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:-

❖ மேற்குறித்த தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

(02 புள்ளிகள்)

(ஆ) கீழே காட்டப்பட்டுள்ள மீதிகளை கருத்தில் கொண்டு கோகுலன் வணிகத்தின் 31.12.2018 இலுள்ள பரீட்சை மீதியைத் தயாரிக்குக.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| கடன் பட்டோர் | 40000 | பெற்ற கழிவு | 6000 |
| கட்டிடம் | 200000 | விற்பனைகள் | 194000 |
| கடன் கொடுத்தோர் | 100000 | மூலதனம் | 50000 |
| கொடுத்த கழிவு | 10000 | | |
| கொள்வனவு | 100000 | | |

(02 புள்ளிகள்)

Education கல்வி

4. (அ) கயல்விழி வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத் தொகை ரூ 3000 ஆகும். மேலதிக தகவல்கள் வருமாறு

01.01.2018 சில்லறைக் காசு மீதி ரூ 600

01.01.2018 சில்லறைச் செலவுக்கான கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது

31.01.2018 வரையான சில்லறைச் செலவுகளின் மொத்த தொகை ரூ 2650

01.02.2018 கட்டுநிதி மீள் நிரப்பப்பட்டது

**வேண்டப்படுவது**

1. 01.01.2018 இல் வசக்கட்டு மீள் நிரப்பட்ட தொகை எவ்வளவு?

2. 01.02.2018 இல் வசக்கட்டு மீள் நிரப்பபட்ட தொகை எவ்வளவு?

(02 புள்ளிகள்)

(ஆ)

i. வங்கிக் கணக்கு இறுதி மீதியும், வங்கி கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

ii. மேற் கூறப்பட்ட காரணங்களில் வங்கி கூற்றில் காணப்படும் அதேவேளை, வங்கிக் கணக்கில் இடம் பெறாத இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 07**

1. (அ) நிதி நிலைமைக் கூற்று என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) சொத்தொன்றின் மீது ஒவ்வொரு வருடமும் பெறுமானத் தேய்விடப்பட வேண்டிய தொகையை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2. (அ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் விமல் வணிகத்தில் 31.12.2018 இல் முடிவுற்ற ஆண்டில் இடம் பெற்றது.



kalvi.lk

1. மாதாந்த நிலைய வாடகை ரூ 5000 ஆகும். அதில் 8 மாதங்களுக்கான வாடகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.
2. வருடத்திற்கான எழுது கருவிகள் மீதான செலவு ரூ 20000 இல் ரூ 6000 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் அட்டவணையில் பூரணப்படுத்திக் காட்டுக.

| செலவுக் கணக்கு | காசாக செலுத்தப்பட்ட செலவுகள் | அட்டுறு செலவு | செம்மையாக்கலின் பின் நிதியாண்டுக்கான செலவு |
|---|---|---|---|
| 1.<br>2. | | | |

3. சரவணன் வணிகத்தின் நிதியாண்டுக் காலம் 2018.12.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழ்வருமாறு:-

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2018.01.01 இல் மூலதனம் | | 310000 |
| கொள்வனவுகளும், விற்பனைகளும் | 300000 | 670000 |
| நிருவாகச் சம்பளம் | 44000 | |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 52000 | |
| கடன்பட்டோரும், கடன் கொடுநரும் | 75000 | 92000 |
| உட்சுமை கூலி | 22000 | |
| 2018.01.01 இல் இருப்பு | 38000 | |
| கொடுத்த கழிவு, பெற்ற கழிவு | 15000 | 18000 |
| விநியோக வான் (கிரயத்தில்) | 500000 | |
| 10% நிலையான வைப்பு | 150000 | |
| போக்குவரத்துச் செலவு | 10000 | |
| விளம்பரச் செலவு | 6000 | |
| தளபாட உபகரணம் (கிரயத்தில்) | 60000 | |
| 12% வங்கிக் கடன் | | 200000 |
| செலுத்தப்பட்ட கடன் வட்டி | 22000 | |
| 2018.01.01 இல் திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | |
| விநியோக வான் | | 50000 |
| தளபாட உபகரணம் | | 12000 |
| மின்சாரக் கட்டணம் | 8000 | |
| காசுமீதி | 50000 | |
| | 1352000 | 1352000 |

**மேலதிக தகவல்கள்:-**

1. 2018.12.31 இல் இறுதி இருப்புத் தொகை ரூ 30000
2. 2018.12.31 இல் அட்டுறு செலவுகள் வருமாறு
   நிருவாகச் சம்பளம் ரூ 3000
   மின்சாரக் கட்டணம் ரூ 5000
3. 2018.12.31 இல் அறவிட முடியாக் கடனாக ரூ 1000 இனை பதிவழிக்குக
4. விநியோக வான் மற்றும் தளபாட உபகரணங்களுக்கு கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுக.

**வேண்டப்படுவது**

1. 31.12.2018 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கூற்று (04 புள்ளிகள்)
2. 31.12.2018 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

**மாகாணக்கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019**

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

**பகுதி 1 விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 11. | 2 | 21. | 2 | 31. | 4 |
| 2. | 3 | 12. | 3 | 22. | 1 | 32. | 2 |
| 3. | 4 | 13. | 1 | 23. | 2 | 33. | 1 |
| 4. | 2 | 14. | 2 | 24. | 2 | 34. | 1 |
| 5. | 2 | 15. | 1 | 25. | 1 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 3 | 26. | 4 | 36. | 4 |
| 7. | 1 | 17. | 2 | 27. | 2 | 37. | 1 |
| 8. | 3 | 18. | 2 | 28. | 3 | 38. | 3 |
| 9. | 3 | 19. | 3 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 4 | 20 | 4 | 30. | 1 | 40. | 3 |

பகுதி 11

வினா இல 01

1) (அ) தனியார்துறை ( 01 புள்ளி)
(ஆ) மூலதனம் ( 01 புள்ளி)

2) (அ) நாட்டில் சமாதான நிலைமை காணப்படல்
வேலைக்குச் செல்லும் பெண்கள் தொகை அதிகரிப்பு
முதியோர் சனத்தொகை அதிகரிப்பு
இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளுக்கான விலை அதிகரிப்பு
( 2× ½= 01 புள்ளி)

(ஆ) வித்தியன் கற்றிருந்த பண்ணைவளர்ப்பு மற்றும் பால் பதனிடல் தொடர்பான அறிவு
சேமித்த பணம் ( 2× ½= 01 புள்ளி)

3) (அ) இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளுக்கான விலை அதிகரிப்பு ( 01 புள்ளி)
(ஆ) திட்டமிடல்:-
வித்தியன் எதிர்காலத்தில் தானே சுயமாக பண்ணை வளர்ப்பினை மேற்கொள்ள தீர்மானித்தல்
வித்தியன் நிதிப்பற்றாக்குறையினை ஈடுசெய்ய வருகின்ற மாதத்தில் மேலதிக மூலதனமாக ரூ 100 000 இனை இடத் தீர்மானித்திருந்தல்
ஒழுங்கமைத்தல்:-
ஊழியர் ஒருவரை நியமித்தல் ( 2× ½= 01 புள்ளி)

4) (அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ( 01 புள்ளி)
(ஆ) பொருளாதாரக் கொள்கை
வணிகங்களுக்கு சாதகமான சட்டதிட்டங்கள் ( 01 புள்ளி)

5) ரூ 10 70 000 ( 02 புள்ளி)
அல்லது
(155 000+35000+300000+500000+100000) - 20000= 10 70 000
½ புள்ளி ½ புள்ளி
அல்லது
10 90 000 - 20000
½ ½



kalvi.lk

6) ரூ 222 000 ( 02 புள்ளி) அல்லது

காசுப் புத்தகம்

| திகதி | ப.இ | விபரம் | பே.ப | ரூபா | திகதி | கை.இ | விபரம் | பே.ப | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1.6.2018 | | மீதி | 01 புள்ளி | 155000 | | | கொள்வனவு | 01 பு | 300000 |
| | | விற்பனை | | 400000 | | | சம்பளம் | | 18000 |
| | | | | | | | காப்புறுதி | | 10000 |
| | | | | | | | பால் சேகரித்தல் | | 5000 |
| | | | | | | | மீதி | | 222000 |
| | | | | 555000 | | | | | 555000 |

7) (அ) ஊழியர் சம்பளம்
காப்புறுதிக் கட்டணம்
மின்சாரக் கட்டணம் ( 2× ½= 01 புள்ளி)
(ஆ) விற்பனை வருமானம்
மேலதிக மூலதனம் ( 1×1= 01 புள்ளி)

8) (அ) மின்சாரக் கட்டணக் கணக்கு
அட்டுறு மின்சாரக் கட்டணக் கணக்கு (01 புள்ளி)
(ஆ) காணிகட்டிடம்
விநியோக வாகனம்
பால் பதனிடல் இயந்திரம் ( 2× ½= 01 புள்ளி)

9) காசுக் கணக்கு, மூலதனக் கணக்கு
( 02 புள்ளிகள்)

10) வித்தியன் வணிகத்தின்
31.06.2018 முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| காசு விற்பனை | ½ 400000 | |
| கடன் விற்பனை | 150000 | 550000 |
| கழி | | |
| **செலவினங்கள்** | | |
| கடன் கொள்வனவு | 50000 | |
| காசுக் கொள்வனவு | 300000 | |
| ஊழியர் சம்பளம் | ½ 18000 | |
| காப்புறுதிக் கட்டணம் | 10000 | |
| பால் சேகரிக்கும் செலவு | 5000 | |
| மின்சாரக கட்டணம் | 2000 | |
| காணி, கட்டிடத் தேய்வு | ½ 3000 | |
| விநியோக வாகனத் தேய்வு | 5000 | |
| பால் பதனிடல் உபகரணத் தேய்வு | 1000 | 394000 |
| | | ½ 156000 |

Education கல்வி

## விடைகள்

## பகுதி II

02. (01)

(அ) (i) இலாபத்தை உழைத்தல்

(ii) நுகர்வோரது தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்தல்

(2 X ½ = 01 புள்ளி)

(ஆ) உரிமையாளர்

ஊழியர்

முகாமையாளர்

(2 X ½ = 01 புள்ளி)

(02) (i) பிழை (iii) சரி

(ii) சரி (iv) பிழை

(4 X ½ = 01 புள்ளி)

(03)

(அ) உழைப்பு

முயற்சி

(ஆ) உழைப்பு – உதவியாளர்

முயற்சி – பாலன்

(4 X ½ = 02 புள்ளி)

(04) (அ) ரதனின் வணிகம் உரிமையாளரின் முழுமையான பெயரை ஒத்ததாக காணப்படாமையினால் 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்

(01 புள்ளி)

(ஆ) (1) மூலதனமானது உரிமையாளராகிய தனிநபரால் ஈடுபடுத்தப்படல்

(2) இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்

(3) வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு

(4) சட்ட ஆளுமை இன்மை

(5) தொடர்ந்து இயங்கும் தன்மையற்றது

(6) பதிவு செய்தல் கட்டாயமன்று

(2X ½ = 01 புள்ளி)

03. (01) (அ) பொருட்கள், சேவைகள் கொள்வனவு, விற்பனை செய்வதன் ஊடாக உரிமை மாற்றம் இடம்பெறும் செயற்பாடு வியாபாரம் எனப்படும்.

(01 புள்ளி)

(ஆ) (1) நுகர்வோனின் அன்றாட தேவைகள் பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் சேவைகள் வழங்குதல்

(2) புதிய வகைப் பொருட்களை நுகர்வோனுக்கு அறிமுகப்படுத்தல்

(3) கடனுக்கு பொருட்களை விற்பனை செய்தல்

(4) நுகர்வோரின் துலங்களை உற்பத்தியாளருக்கு தெரியப்படுத்தி பொருளின் தரத்தை உயர்த்த உதவுதல்

(2X ½ = 01 புள்ளி)

(02) (i) சரி (ii) சரி (iii) சரி (iv) பிழை

(4X ½ = 01 புள்ளி)

(03) (அ) ராமன் (01 புள்ளி)

(ஆ) குறுக்கு கோடிடல் வேண்டும் (01 புள்ளி)

(04) (அ) காப்புறுதி அளிப்பவர் - வரையறுத்த செலிங்கோ காப்புறுதி

காப்புறுதி பெறுபவர் - கண்ணன் (01 புள்ளி)

(ஆ) (1) காப்புறுதி செய்யத்தகு உரிமை

(2) உயர் நம்பிக்கை

(3) இழப்பீட்டுத் தத்துவம் (2X ½ = 01 புள்ளி)



kalvi.lk

04. (01) (அ) வணிகத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமான இலாபத் தன்மையுடன் திருப்திபடுத்தக் கூடிய நுகர்வோர்களை உள்ளடக்கிய சந்தையைக் குறிக்கும் (01 புள்ளி)

(ஆ) வங்கிச் சேவை
காப்புறுதிச் சேவை
போக்குவரத்துச் சேவை
தொடர்பாடல் சேவை

(2X ½ = 01 புள்ளி)

(02) (i) சரி (ii) பிழை (iii) சரி (iv) பிழை (4X ½ = 02 புள்ளி)

(03) (i) திட்டமிடல்
(ii) ஒழுங்கமைத்தல்
(iii) கட்டுப்படுத்தல்
(iv) நெறிப்படுத்தல் (4X ½ = 02 புள்ளி)

(04) உற்பத்திப் பொருள் - பல்வேறுபட்ட கேக் வகைகள்
பொருளின் தரம்
பல்வேறுபட்ட வடிவங்கள்
விலை - ரூ 280, ரூ 450
இடம் - உணவகம், வியாபார நிலையங்களுக்கு விநியோகித்தல்
மேம்படுத்தல் - பத்திரிகை விளம்பரம் செய்தல்
துண்டுபிரசுரம் வெளியிடல்

(4X ½ = 02 புள்ளி)

05. (01) (அ) கடந்த காலக் கொடுக்கல், வாங்கல் அல்லது நிகழ்வொன்றின் பெறுபேறாக வணிகத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் பொறுப்புக்கள் எனப்படும்.

(01 புள்ளி)

(ஆ)

| <u>சொத்துக்கள்</u> | <u>பொறுப்புக்கள்</u> |
|---|---|
| மோட்டார் வாகனம் | வங்கிக்கடன் |
| நிலையான வைப்பு | வங்கி மேலதிகபற்று |
| கட்டிடம் | கடன் கொடுத்தோர் |
| கடன்பட்டோர் | அட்டுறுச் செலவுகள் |
| (½ புள்ளி) | (½ புள்ளி) |

(02)

| | | |
|---|---|---|
| (i) | சொத்து அதிகரித்தல் | வரவு |
| | சொத்து குறைவடைதல் | செலவு |
| (ii) | பொறுப்பு அதிகரித்தல் | செலவு |
| | பொறுப்பு குறைவடைதல் | வரவு |
| (iii) | வருமானம் அதிகரித்தல் | செலவு |
| | வருமானம் குறைவடைதல் | வரவு |
| (iv) | செலவு அதிகரித்தல் | வரவு |
| | செலவு குறைவடைதல் | செலவு |

(4X ½ = 02 புள்ளி)

(03) (அ) (i) பிழை (ii) பிழை (iii) சரி (iv) பிழை

(4X ½ = 02 புள்ளி)

(ஆ)

| கொடுக்கல் வாங்கல் | வரவு வைக்க வேண்டிய கணக்கு | செலவு வைக்க வேண்டிய கணக்கு |
|---|---|---|
| b | காசுக் கணக்கு | வங்கிக்கடன் கணக்கு |
| c | கொள்வனவு கணக்கு | கடன் கொடுத்தோர் கணக்கு |
| d | மின்சாரக் கட்டணக் கணக்கு | காசுக் கணக்கு |
| e | தளபாடக் கணக்கு | தம்ரோ தளபாட விற்பனை நிலைய கணக்கு |

(4X ½ = 02 புள்ளி)



kalvi.lk

(04) (அ) நடைமுறைச் சொத்து ரூ 65000
நடைமுறையல்லா சொத்து ரூ 190000
நடைமுறைப் பொறுப்பு ரூ 50000
நடைமுறையல்லா பொறுப்பு ரூ 60000

(4X ½ = 02 புள்ளி)

(ஆ) கொள்வனவு நாட்குறிப்பேடு

| திகதி | பட்.இல | வழங்குநர் | பெறுமதி ரூ | பே.ப |
|---|---|---|---|---|
| 6/15/2019 | 110 | ஆதவன் | 5500 | |
| 6/23/2019 | 125 | கதிரவன் | 11300 | |
| 6/30/2019 | | கொள்வனவு கணக்கிற்கு மாற்றியது (½) | 16800 | |

ஆதவன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 15/6 | கொள்வனவு கணக்கு | | 5500 (½) |

கதிரவன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 23/6 | கொள்வனவு கணக்கு | | 11300 (½) |

கொள்வனவு கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| 30/6 | கடன் கொடுத்தோர் கணக்கு | | 16800 (½) | | | | |

06. (01) (அ) வங்கியின் நடைமுறைக் கணக்கில் தற்போது காணப்படும் மீதியிலும் பார்க்க கூடுதலான தொகைக்கு காசோலை வழங்க, வங்கியால் நடைமுறைக் கணக்குரிமையாளருக்கு அனுமதியளிக்கும் வசதியைக் குறிக்கும்

(01 புள்ளி)

(ஆ) (1) கொடுக்கல் வாங்கல்கள் முழுமையாக ஏடுகளில் விடுபடல்
(2) கொடுக்கல் வாங்கலொன்றின் பெறுமதியை மூல ஏடுகளில் பிழையாகப் பதிதல்
(3) ஒரே கொடுக்கல் வாங்கலை கணக்கேடுகளில் இருமுறை பதிதல்
(4) ஏதேனும் ஒரு கொடுக்கல் வாங்கலின் பெறுமதி உரிய கணக்கில் பதியாது வேறொரு கணக்கில் பதிகின்றமை

(2X ½ = 01 புள்ளி)

காசுக்கணக்கு

| திகதி | ப இ | விபரம் | பே. ப | தொகை | திகதி | கை இ | விபரம் | பே. ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01/18 | | மூலதனம் | (½) | 100000 | 5/1/18 | | வாடகை | | 5000 } (½) |
| 03/01/18 | | விற்பனை | (½) | 40000 | 7/1/18 | | மின்சாரம் | | 3000 } |
| | | | | | 7/1/18 | | மீ/செ | | 132000 (½) |
| | | | | 140000 | | | | | 140000 |



kalvi.lk

03. (அ)

பொது நாட்குறிப்பு

| திகதி | கைச் சாத்து இல | விபரம் | பே ப | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| | | தளபாடத் திருத்தக் கணக்கு வரவு | | 6000 | |
| | | தளபாடக் கணக்கு | | | 6000 |
| | | (தளபாடத் திருத்தம் தளபாடக் கணக்கில் பதியப்பட்டது திருத்தப்பட்டமை) | | | (01 புள்ளி) |
| | | மின்சாரக்கட்டணக் கணக்கு | | 1200 | |
| | | தொங்கல் கணக்கு | | | 1200 |
| | | (காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்த மின்சாரக் கட்டணம் திருத்தப்பட்டமை) | | | (01 புள்ளி) |

(ஆ) பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கடன்பட்டோர் | 40000 | |
| கட்டிடம் | 200000 | |
| கடன் கொடுத்தோர் | | 100000 |
| கொடுத்த கழிவு | | |
| கொள்வனவு | 10000 | |
| பெற்ற கழிவு | 100000 | |
| விற்பனைகள் | | 6000 |
| மூலதனம் | | 194000 |
| | | 50000 |
| | 350000 | 350000 |

(01 புள்ளி) (01 புள்ளி) (02 புள்ளி)

04. (அ) (1) ரூ 2400 (01 புள்ளி)
(2) ரூ 2650 (01 புள்ளி)

(ஆ) (1) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்
(2) வசூலிக்கப்படாத காசோலைகள்
(3) நேரடி வைப்புக்கள்
(4) நிலையியல் கட்டளையின் பெயரிலான கொடுப்பனவுகள்
(5) வங்கிக் கட்டணங்கள், காசோலை கட்டணங்கள்

(2X ½ = 01 புள்ளி)

(02) நேரடி வைப்புகள்
நிலையியல் கட்டளைக் கொடுப்பனவு
வங்கிக் கட்டணம் / காசோலைக் கட்டணம்

(2X ½ = 01 புள்ளி)

07. (01) (அ) சொத்துக்கள், உரிமை மற்றும் பொறுப்புக் கணக்குகளின் மீதிகளை உட்படுத்தி வணிகத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்காக குறித்தவொரு தினத்தில் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை (01 புள்ளி)

(ஆ) (1) சொத்தின் கிரயம்
(2) சொத்தின் பயன்படு ஆயட்காலம்
(3) சொத்தின் எஞ்சிய பெறுமதி

(2X ½ = 01 புள்ளி)



kalvi.lk

(02) (அ)

| செலவுக் கணக்கு | காசாக செலுத்தப்பட்ட செலவுகள் | அட்டுறுச் செலவு | செம்மையாக்களின் பின் நிதியாண்டுக்கான செலவு | |
|---|---|---|---|---|
| வாடகை | ரூ 40000 | ரூ 20000 | ரூ 60000 | (01 புள்ளி) |
| எழுது கருவி செலவு | ரூ 6000 | ரூ 14000 | ரூ 20000 | (01 புள்ளி) |

(முழுமையாக நான்கு விடயங்களும் சரியெனின் 1 புள்ளி வழங்கவும்)

3.

சரவணன் வணிகம்

31.12.2018 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று (½ புள்ளி)

| விபரம் | தொகை | தொகை | தோகை |
|---|---|---|---|
| விற்பனை | | | 670 000 |
| கழி:-விற்பனைக் கிரயம் | | | |
| 01.01.2018 இல் இருப்பு | | 38 000 | |
| கொள்வனவு | 300 000 | | |
| உட்சுமை கூலி | 22 000 | 322000 | |
| விற்பனைக்கு தயாரான பொருளின் கிரயம் | | 360000 | |
| இறுதியிருப்பு | (½ புள்ளி) | (30000) | (½ புள்ளி) (330000) |
| மொத்த இலாபம் | (½ புள்ளி) | | 340000 |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | | | 15000 |
| பெற்ற கழிவு | | | 18000 |
| விநியோகச் செலவுகள் | | | 373000 |
| அறவிட முடியாக் கடன் | 1000 | ½ புள்ளி | |
| விநியோக வான் தேய்வு | 50000 | ½ புள்ளி | |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 52000 | | |
| கொடுத்த கழிவு | 15000 | | |
| போக்குவரத்துசெலவு | 10000 | | |
| விளம்பரம் | 6000 | 134000 | |
| நிருவாகச் செலவுகள் | | | |
| நிருவாகச் சம்பளம் | 47000 | | |
| மின்சாரக் கட்டணம் | 13000 | | |
| தளபாடம் தேய்வு | 6000 | 66000 | |
| நிதிச் செலவுகள் | | | |
| வங்கிக் கடன் வட்டி | ½ 24000 | 24000 | 224000 |
| தேறிய இலாபம் மூலதனக் கணக்கிற்கு மாற்றியது ½ புள்ளி | | | 149000 |

சரவணன் வணிகத்தின்

31.12.2018 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று (½ புள்ளி)

| விபரம் (½ புள்ளி) | கிரயம் | தி.பெ.தே | தே.பெறுமதி |
|---|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்து | | | |
| விநியோக வான் | 500000 | 100000 | 400000 |
| தளபாட உபகரணம் | 60000 | ½ புள்ளி18000 | 42000 |
| | 560000 | 118000 | 442000 |
| நிலையான வைப்பு | | | ½ 150000 |
| நடைமுறைச் சொத்து | | | |
| இறுதியிருப்பு | | 30000 | |
| கடன்பட்டோர் | | ½ 74000 | |
| | | ½ 15000 | |
| வருமதி வட்டி வருமானம் | | 50000 | 169000 |
| காசு மீதி | | | |
| உரிமையாண்மை | | | |
| மூலதனம் | | 310000 | |
| தேறிய இலாபம் | | ½ 149000 | 459000 |
| நடைமுறையல்லாப் பொறுப்பு | | | |
| வங்கிக் கடன் | | | 200000 |
| நடைமுறைப் பொறுப்பு | | | |
| அட்டுறு நிருவாகச் சம்பளம் | | 3000 | |
| அட்டுறு மின்சாரக் கட்டணம் | | ½ 5000 | |
| கடன் கொடுத்தோர் | | 92000 | |
| அட்டுறு வங்கி கடன் வட்டி | | 2000 | 102000 |
| | | | 761000 |



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page